ISSN : 2456-821X.

புதிய அவையம்

**Vol. 09, Issue – 02, December - 2025**

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

---

# நாட்டுப்புற தெய்வங்களில் பாப்பாத்தியம்மன் வழிபாட்டு மரபு (திருப்பத்தூர் மாவட்டம் - கள ஆய்வினை முன்வைத்து)

**முனைவர் ஆ. பிரபு,**

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),

திருப்பத்தூர் - 635 601,

திருப்பத்தூர் மாவட்டம்,

**பா. ரம்யா,**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ்த்துறை,

நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),

திருப்பத்தூர் - 635 601,

திருப்பத்தூர் மாவட்டம்.

**(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

---

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தின் நாட்டுப்புற தெய்வ வழிபாடு தமிழ்ச் சமூகத்தில் தொன்மையான வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகும். கிராம வாழ்வியல் மக்கள் நம்பிக்கை, சமூக ஒற்றுமை ஆகியவற்றோடு இணைந்து வளர்ந்த இந்த வழிபாட்டு மரபுகள் காலம் கடந்தும் இன்றும் நிலைத்து வருகின்றன. தமிழக மண்ணில் தெய்வங்கள் மக்கள் வாழ்வோடு ஒன்றிப்போய் நிற்கின்றன. மக்களது நம்பிக்கைகள், மரபுகள், பண்பாடுகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் அம்மன்கள் கிராமங்களின் காவல் தெய்வங்களாக விளங்குகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கதாகத் திருப்பத்தூர் பாப்பாத்தியம்மன்

வழிபாடு அமைந்துள்ளது. திருப்பத்தூரை அடையாளப்படுத்தும் மிக முக்கிய தெய்வமாகப் பாப்பாத்தியம்மன் விளங்குகிறார். பக்தி, நம்பிக்கை மற்றும் சமூக ஒற்றுமையின் மையமாகத் திருப்பத்தூர் மக்கள் திகழ்கின்றனர்.

**குறிச்சொற்கள்**

- பாப்பாத்தியம்மன் வழிபாடு
- வழிபாட்டின் வரலாறு
- படையல்
- நேர்த்திக்கடன்

**முன்னுரை**

தமிழகத்தின் பாரம்பரிய சமய மரபுகளில் நாட்டுப்புற தெய்வ வழிபாடு தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. மக்களின் அன்றாட வாழ்வில் பாதுகாப்பு, வளம், பெண்மையின் சக்தி ஆகியவற்றின் அடையாளமாகவும், காவல் தெய்வமாகவும் பாப்பாத்தியம்மன் வழிபாடு திருப்பத்தூர் மாவட்டத்தின் முக்கியமான வழிபாட்டுச் சின்னமாக விளங்குகிறது. இந்த ஆய்வு நாட்டுப்புற வழிபாட்டின் வரலாறு, முக்கியத்துவம் அதன் சமூகத்தாக்கம் ஆகியவற்றைக் குறித்து ஆராய்கிறது.

**திருப்பத்தூர் மாவட்டம் - ஒரு சுருக்கம்**

திருப்பத்தூர் வரலாறு பல்லவர், சோழர் மற்றும் நாயக்கர் காலங்களில் இருந்து தொடங்குகிறது. திருப்பத்தூர் பகுதியில், பழங்கால நடுகற்கள் மற்றும் கல்வெட்டுகள் பல கண்டறியப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, புதிய மாவட்டமாகத் திருப்பத்தூர் உருவானது. சந்தன மரங்கள் அதிக அளவில் இருப்பதால் இது "சந்தன மாநகர்" என்றும் அழைக்கப்படுகிறது. ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகள், பாலாறு, பாம்பாறு உள்ளிட்ட ஆறுகள் மற்றும் சமவெளிகள் நிறைந்த பகுதியாக திருப்பத்தூர் திகழ்கின்றன.

**கோவில் அமைப்பு**

திருப்பத்தூர் மாவட்டம் ‘ஆண்டியப்பனூர்’ என்னும் கிராமத்தில் இயற்கை அழகு நிறைந்த ஒரு மலைப்பகுதியின் அடிவாரத்தில் அமைந்திருக்கிறது பாப்பாத்தியம்மன் திருக்கோயில். ‘கோயில்’ என்றால் இங்கு அழகிய கட்டுமானம், கோபுரம் என்று எதுவும் கிடையாது.



மரக்கிளைகளும், செடிக்கொடிகளும் பின்னிப் பிணைந்து கோபுரமாக அமைந்துள்ளது. கடந்த 300 ஆண்டுகளுக்கு மேலான ஒற்றைப் பனைமரம் கோயிலுக்கு அடையாளமாகத் திகழ்கின்றது. பனை மரத்தின் கீழ் மூலவரான அம்மன் சிலை உள்ளது. இங்குக் கோயிலைக் கட்ட முயன்றாலும் அது முடிவதில்லை என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். கோயில், மண்டபம், கோபுரங்கள் ஆகியன எழுப்ப அந்த அம்மன் விரும்பவில்லை என்றும் கூறுகின்றனர்.

**வற்றாத தீர்த்தக்குளம்**

இந்த சக்தி நிறைந்த பாப்பாத்தி அம்மன் கோயிலில் ஒரு தீர்த்தக் குளம் இருக்கிறது. இது மனிதர்களால் உணர்ந்து கொள்ளப்படாத மர்மமாக உள்ளது. இக்குளம் வெறும் ஐந்து அடி ஆழம்தான், ஆனால் இக்குளத்தில் தண்ணீர் எங்கிருந்து உற்பத்தி ஆகிறது என்று இன்றளவும் யாருக்கும் தெரியாத நிலை உள்ளது. இதை ஆராய வந்தவர்களுக்குத் தீங்கு நேர்ந்ததாகக் கிராம மக்கள் கூறுகின்றனர். மேலும் இக்குளத்தில் எக்காலத்திலும்



**(வற்றாத தீர்த்தக்குளம்)**

தண்ணீர் வற்றவே வற்றாதாம். சுற்றுவட்டாரத்தில் இருக்கும் கிராமங்களில் கோடைக்காலத்தில் தண்ணீர் பஞ்சம் வந்தாலும் இக்குளத்தில் மட்டும் எப்போதும் தண்ணீர் வற்றுவதே இல்லையாம். அப்படித் தண்ணீர் வற்றினால் இக்கிராமத்திற்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடும் என்று நம்பப்படுகிறது. இந்தத் தீர்த்தக் குளத்தின் சிறப்பு என்னவென்றால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் அம்மனிடம் வேண்டியதை மனதில் நினைத்துக் கொண்டு ஒரு வாழைப்பழத்தை மூன்றாகப் பிரித்து அந்தத் தீர்த்த குளத்தில் விடுகின்றனர். அந்த வாழைப்பழத் துண்டுகள் உடனடியாக மேலே வந்தால் நினைத்த காரியம் உடனடியாக நிறைவேறுமாம். மாறாகத் தாமதமாக மேலே வந்தால் தாங்கள் நினைத்ததும் தாமதமாகத்தான் நிறைவேறுமாம். ஒருவேளை வாழைப்பழத் துண்டுகள் மேலே வராமல் உள்ளே சென்றுவிட்டால் நினைத்த காரியம் நிறைவேறாது என்று பக்தர்களால் நம்பப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இக்குளத்தில், சுற்றுப்புறத்தில் உள்ள கிராம மக்கள் தாங்கள் வளர்க்கும் மாடுகள் கன்று ஈன்றவுடன் முதலில் கறந்த பாலை இக்குளத்தில் ஊற்றுகின்றனர். அப்படி ஊற்றினால் மடியில் பால் அதிகமாகச் சுரக்கும் என்று நம்பப்படுகிறது. அது மட்டுமில்லாமல் பக்தர்களுக்கு ஏதேனும் உடலில் கட்டி இருந்தால் இக்குளத்தில் முழு வெல்லத்தை விடுகின்றனர். அந்த வெல்லம் எப்படி மெல்ல மெல்லக் குளத்தில் கரைகிறதோ அவ்வாறே அக்கட்டியும் கரையும் என்பது நம்பிக்கை. வெல்லம் கரைத்துவிடுவதன் வழியே பல நோய்கள் தீர்ந்து விடுவதாகவும் சொல்கிறார்கள்.

**பாப்பாத்தியம்மன் வழிபாட்டின் வரலாற்றுப் பின்னணி**

இக்கோயில் உருவாக ஒரு வரலாற்றைக் கூறுகின்றனர் இக்கிராம மக்கள். ஒரு பிராமணப்பெண் பழங்குடியின இளைஞரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டதால் பெண் வீட்டார் ஏற்றுக்கொள்ளாமல் வீட்டை விட்டுத் துரத்துகின்றனர். இதனால் அவர்கள் கணவன் மனைவியாகத் தனித்து வசித்து வந்திருக்கின்றனர். பின்பு அப்பெண் கர்ப்பம் ஆகிறாள். தன் பிறந்த வீட்டின் ஞாபகம் வரவே, அங்கு சென்று வர விரும்புகிறாள். ஆனால் கணவர் அங்கு அழைத்துச் செல்ல மறுக்கிறார்.



(பாப்பாத்தியம்மன்)



(பனை மரம்)

நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் அப்பெண் ஒருநாள் இரவோடு இரவாக வீட்டை விட்டுத் தனியாகப் பிறந்த வீட்டை நோக்கிச் செல்கிறாள். அப்பகுதி மலையின் அடிவாரத்தில் செல்லும் பொழுது திடீரெனப் பிரசவ வலி ஏற்படுகிறது. அங்கேயே ஒரு பெண் குழந்தையும் பிறக்கிறது. அப்பெண் குழந்தைதான் இந்த பாப்பாத்தியம்மன் எனவும்; பனிக்குடம் உடைந்து சென்ற நீர்தான் இங்குத் தீர்த்தக் குளமாக மாறியது என்றும்; தொப்புள் கொடி அறுக்கப் பனை ஓலை பயன்படுத்தியதாகவும் (இன்றும் அப்பனை மரம் இங்கு உள்ளது), அறுத்தெறிந்த தொப்புள் கொடி, பல கிளைகளாக மாறி இந்த அம்மனுக்கு நிழல் தந்ததாகவும் கூறுகின்றனர்.

**நேர்த்திக்கடன்**

திருமண வரம், குழந்தை வரம், உடல் நலக்குறைவு, கால்நடைகளுக்குப் பிரச்னை போன்ற பல வேண்டுதல்களுக்காக இக்கோயிலுக்குப் பக்தர்கள் வருகின்றனர். அவர்கள் முன்வைத்த வேண்டுதல்கள் நிறைவேறினால் பல்வேறு நேர்த்திக் கடன்களையும் செலுத்த பக்தர்கள் வருகின்றனர். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடந்தால் கோயிலாக இருக்கும் மரக் கிளைகளில் தாலியைக் கட்டுகின்றனர்.





குழந்தை வரம் கேட்டு நிறைவேறியவர்கள் ஆண் குழந்தை பிறந்தால் மணியையும், பெண் குழந்தையாகப் பிறந்தால் தொட்டிலையும் கட்டுகின்றனர். மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் நோய் நொடி தீர்ந்தால் மண்ணால் செய்யப்பட்ட மனிதச் சிலையையும், மாட்டின் சிலையையும் கோயிலுக்கு நேர்த்திக் கடன்களாகச் செலுத்துகின்றனர்.

**படையல் மற்றும் திருவிழா**

இக்கோயிலில் குடியிருக்கும் பாப்பாத்தி அம்மன், சைவம் என்பதால் ஆடு, கோழி என்று எதுவும் பலியிடுவதில்லை. பொரியும், வேர்க்கடலையும்தான் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இக்கோயிலில் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்புப் பூஜை நடத்தப்படுகிறது. வருடத்திற்கு ஒருமுறை ஆடி 18 அன்று மாபெரும் திருவிழா ஒன்றும் இக்கிராம மக்களால் கொண்டாடப்படுகிறது. இக்கோயிலுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து மட்டுமல்லாமல் ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வருகின்றனர்.

## முடிவுரை

திருப்பத்தூர் பாப்பாத்தியம்மன் வழிபாடு என்பது சமூக ஒற்றுமை, பக்தி, நம்பிக்கை மற்றும் பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது. தலைமுறைகள் கடந்தும் மக்களின் மனங்களில் நிலைத்திருக்கும் இந்த அம்மன், அவர்களின் வாழ்விலும் உள்ளத்திலும் ஒளிவிளக்காக இவ்வழிபாடு உள்ளது. பாப்பாத்தியம்மன் மீது மக்களின் நிலையான பக்தி, தமிழ் மக்களின் பண்பாட்டின் மகத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**கள ஆய்வுக் களம்**

- ஆண்டியப்பனூர்

**தகவலாளர்கள்**

- ✓ கோவில் பூசாரி - மணி
- ✓ ஊர் மக்கள் – கங்கா, பார்வதி